# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் ஜெர்மனியிலுள்ள ஜல்ஸா திடலில் 28.06.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனியின் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு, இன்றிலிருந்து தனது ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த மாநாடு மூன்று நாட்கள் வரை நடக்கும் இன்சா அல்லாஹ். உலகின் மற்ற சில நாடுகளிலும் இதே தேதிகளில் மாநாடுகள் நடக்கின்றன. குறிப்பாக அமெரிக்கா, கபாபீர் போன்ற நாடுகளில் இம்மாநாடுகள் நடக்கின்றன. இந்த ஜமாஅத்துகளின் அமீர்கள் இந்த நாட்களில் எங்களது மாநாடுகள் நடக்கின்றன. எனவே எங்களைப் பற்றியும் எடுத்துக் கூற வேண்டும் என்று தங்களது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். இப்போது அமெரிக்காவில் அதிகாலை நேரமாக இருக்கும். கபாபீரிலும் ஒருவேளை ஜுமுஆவின் நேரம் கடந்திருக்கும். அமெரிக்காவில் இன்னும் ஆறு மணி நேரம் கழிந்த பிறகே ஜுமுஆ ஆரம்பமாகும். இறுதி நாளன்று ஞாயிற்றுக்கிழமை இங்கு மாநாடு முடிவுறும் நேரத்தில் தான் அங்கும் மாநாடுகள் நிறைவடையும். இவ்வகையில் அவர்களும் மாநாட்டின் நிறைவுரை மற்றும் துஆவில் கலந்து கொள்வார்கள் இன்சா அல்லாஹ்.

ஒரே நாளில் பல்வேறு நாடுகளில் மாநாடுகள் நடப்பது ஒருவகையில் நற்பலனைத் தரக்கூடியதாக ஆகிவிடுகின்றது. அதாவது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் தங்களது நாடுகளில் நடக்கின்ற மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக ஒன்றுகூடி இருக்கும்போது நேரலை (LIVE) ஆக குத்பா ஒளிபரப்பப்படுவதிலிருந்தும் பலன் அடைகின்றனர்; நேரலை குத்பாவில் கலந்து கொள்கின்றனர். ஜமாஅத்தின் பெரும்பாலானவர்கள் வரை காலத்தின் கலீஃபா கூறும் விசயங்கள் எட்டி விடுகின்றது. ஜமாஅத்தில் உள்ளவர்களில் அதிகமானோர் உலகில் நேரலையில் வரும் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்கின்றனர் என்பதில் ஐயமில்லை என்றாலும், ஒரு பெரும் எண்ணிக்கையிலுள்ள மக்கள் இவற்றை கேட்காமலும் இருக்கின்றனர்.

நான் ஏற்கனவே கூறியது போன்றே அமெரிக்காவிலும் ஏனைய இடங்களிலும் எங்கெல்லாம் மாநாடுகள் இந்த நாட்களில் நடக்கின்றதோ அங்குள்ள அஹ்மதிகள் இறுதிநாளில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்வார்கள். ஆனால் இன்று ஜுமுஆவில் இதன் பக்கம் பலருக்கும் கவனம் ஏற்பட்டிருக்கும். அந்த நாடுகளின் நேரங்கள் இந்த நாட்டின் நேரத்துடன் வேறுபட்டுள்ளது என்றாலும், மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் பெரும்பாலான மக்கள் வந்திருப்பதால், மேலும் மாநாட்டில் பங்கேற்கின்றோம் என்ற நிய்யத்தில் அவர்கள் வந்து கலந்து கொள்வதால் தத்தமது நேரத்திற்கேற்ப அவர்கள் எங்கிருந்தாலும் குத்பா அல்லது சொற்பொழிவைக் கேட்கின்றனர். அதாவது பொதுவாக மற்ற நாட்களை விட பெரும் எண்ணிக்கையில் இப்போது மக்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்கின்றார்கள்.

இன்றைய குத்பாவில் நான் ஆண்டு மாநாட்டுடன் தொடர்புடைய விசயங்களைக் கூறும் போது மாநாட்டின் நோக்கங்கள் தொடர்பாக நான் நினைவூட்ட விரும்புகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்களாக எவற்றைக் கூறியுள்ளார்களோ அவற்றை நினைவூட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. அதன் மூலம் மாநாட்டு நாட்களில் அதன் பக்கம் குறிப்பான கவனம் இருக்க வேண்டும். மாநாட்டிற்குப் பிறகு கூட இந்த விசயங்களை தங்களது தகுதிக்கேற்ப தங்களுக்குள் ஈர்த்துக் கொண்டவாறு அதற்கேற்ப ஒவ்வொரு அஹ்மதியும் இவற்றை தங்களது செயல்களில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். இந்த விசயம் கூட மனிதன் கவனம் செலுத்துவதை பொருத்தே அமையும். அதாவது எவ்வளவு நேரம் அவனது கவனம் இந்த விசயங்களில் நிலைத்திருக்கின்றது என்பதையே அது சார்ந்திருக்கின்றது. இன்றைய நாட்களில் உலகின் பிற காரியங்களிலும் பரபரப்பான வேலைகளிலும் மனிதன் ஈடுபட்டிருப்பதால் பெரும்பாலும் உலக விசயங்களையே சார்ந்திருப்பது அவனிடம் மிகைத்து நிற்கின்றது. இதன் காரணமாக கடமையான விசயங்கள் மற்றும் நஃபிலான விசயங்களை நிறைவேற்றுவதில் அவனிடம் சோம்பேறித்தனம் ஏற்பட்டு விடுகின்றது. மாநாட்டில்

கலந்து கொண்ட பிறகு சில அஹ்மதிகள் எனக்கு இவ்வாறு எழுதுகின்றனர். அதாவது நாங்கள் வேறொரு உலகில் இருப்பது போன்றே இந்த மூன்று நாட்களும் கடந்து சென்று விட்டன. ஒரு சிறப்பான ஆன்மீக சூழல் இருந்தது. மாநாட்டிற்குப் பிறகு இந்த நிலை நிலைத்திருக்க துஆ செய்யுங்கள் என்று அவர்கள் எழுதுகின்றனர். எவ்வாறிருப்பினும், இப்படிப்பட்ட நிலைமைதான் மாநாட்டின் நாட்களில் மிகைத்திருக்கின்றது. மேலும் மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரின் மீதும் இதன் தாக்கம் ஏற்படுகின்றது. ஒவ்வொருவரது ஈமானின் நிலைக்கேற்ப இந்த தாக்கம் ஏற்படுகின்றது. சிலர் மாநாடு முடிந்த உடனேயே இந்த விசயங்களை மறந்து விடுகின்றனர். ஒவ்வொருவரது ஈமானின் நிலைக்கேற்ப இந்த தாக்கம் ஏற்படுகின்றது. சிலர் மாநாடு முடிந்தவுடனேயே இவைகளை மறந்து விடுகின்றனர். சொற்பொழிவுகளைக் கேட்கும் போது நாம் நம்மிடம் என்னென்ன உடன்படிக்கைகளை செய்தோம்? நம்முடைய இறைவனிடம் நன்மைகளைச் செய்வதில் தொடர்ந்து அதை நீடித்திருக்கும்படி செய்ய என்ன உடன்படிக்கை செய்தோம்? என்பதை இவர்கள் மறந்து விடுகின்றனர். சிலர் சில நாட்கள் வரை இந்த தாக்கத்தில் நிலைத்திருக்கின்றனர். சிலர் சில வாரங்கள் வரை இந்த தாக்கத்தில் நிலைத்திருக்கின்றனர். இவை யாவும் உண்மைகளாகும். இவற்றிலிருந்து நாம் கண்களைத் திருப்பிக் கொள்ள முடியாது. ஒரு சிலர் இவ்வாறும் உள்ளனர். அவர்கள் மீது இந்த நல்ல சூழலின் தாக்கம் பல வருடங்கள் வரை நிலைத்திருக்கின்றது. பெரும்பாலார் மிகக் குறைந்த காலகட்டம் வரை தான் இந்த தாக்கத்தின் கீழ் இருக்கின்றனர் என்பதால் இறைவன் மீண்டும் மீண்டும் போதனை செய்யுமாறு கூறுகின்றான். நம்பிக்கையாளர்களுக்கு நன்மைகளின் பக்கம் கவனமூட்டுகின்ற அப்படிப்பட்ட சூழலை மீண்டும் மீண்டும் உருவாக்குமாறு அவன் கூறுகின்றான். நம்பிக்கையாளர்களின் கடமைகளின் பக்கம் கவனமூட்டுமாறு கூறுகின்றான். அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டுமாறு கூறுகின்றான். அவர்கள் தங்களது செயல்களை தாங்களே கண்காணிப்பதன் பக்கம் கவனமூட்டுமாறு கூறுகின்றான். மாநாடுகளை நடத்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மீது பேரருள் புரிந்துள்ளார்கள். இதன் மூலம் ஒட்டுமொத்தமாக நம்மை சீர்திருத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் நமக்கு கிடைக்கின்றது. ஆன்மீக உணவை பெற்றுக் கொள்ள முடிகின்றது. நமது கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றின் பக்கம் கவனம் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

நான் ஏற்கனவே கூறியிருப்பது போன்றே நாம் இப்போது மாநாட்டை நடத்துவதன் குறிக்கோள்கள், அதன் நோக்கங்கள் என்ன என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டளைகளின் ஒளியில் சிலவற்றை எடுத்துக் கூறுவேன். அதன் மூலம் மாநாட்டில் வருபவர்களை அவர்கள் எப்படி பார்க்க விரும்பினார்கள்? என்பது தெரிய வரும். ஓர் அஹ்மதியை எப்படிப்பட்டவராக அவர்கள் பார்க்க விரும்பினார்கள்? என்பது தெரிய வரும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“உள்ளம் மறுமையின் பக்கம் முழுமையாக குனிந்து விட வேண்டும். அவர்களிடம் இறைவன் மீதுள்ள அச்சம் உருவாக வேண்டும். அவர்கள் தூய்மையை மேற்கொள்வது, இறையச்சத்தை மேற்கொள்வது, இறைவனுக்கு அஞ்சுவது, தீமைகளிலிருந்து விலகியிருப்பது, மென்மையான உள்ளத்தைக் கொண்டவர்களாக இருப்பது, பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு காட்டுவது, சகோதரத்துவத்துடன் நடந்து கொள்வது ஆகியவற்றில் அவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். மேலும் தாழ்மைக் குணம், பணிவு, நேர்மை ஆகியவை அவர்களிடம் உருவாக வேண்டும். மார்க்கப் பணிகளில் அவர்கள் முழுமையான ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.”

இந்த சில சொற்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் உண்மையான அஹ்மதியின் வாழ்விற்கான முழுமையான செயல் திட்டத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் எத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால், உளத்தூய்மையில் அவர் ஒரு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். மனிதன் சிந்தித்துப் பார்த்தால் இந்த ஒரு சொல்லிலேயே

எவ்வளவு பெரிய போதனை உள்ளது என்றால், அதன் மூலமாக தீமைகளின் வேர் அறுக்கப்பட்டு விடுகின்றது. இதன் கருத்து உலக விசயங்கள் மூலம் நிம்மதி அடைகின்ற நிலையிலிருந்து தன்னை தடுத்துக் கொள்வது, தீய உணர்வுகள் மேலோங்கி நிற்பதிலிருந்தும் தனது உணர்வுகளைத் தடுத்துக் கொள்வது என்பதாகும். இத்தகைய விருப்பங்களின் அனைத்து கதவுகளும் அடைபட்டு விடும் வகையில் இவற்றை தடுக்க வேண்டும். அதனால் விருப்பம் உருவாகாமலேயே இருந்து விட வேண்டும். இப்போது நாம் பார்க்கின்ற போது இறைவன் மனிதனுக்காக உலகில் படைத்துள்ள பொருள்களிலிருந்து மனிதன் முழுமையாக தனது உறவை துண்டித்துக் கொள்ள முடியாது. உலகத்தை விட்டே தன்னை துண்டித்துக் கொள்ளும் வகையில் இவற்றை தடுக்க வேண்டும் என்பதும் இதன் பொருளல்ல. உலக விசயங்கள் தொடர்பாக இறைவன் அனுமதிக்காத விருப்பங்களிலிருந்து தன்னைத் தடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இறைவன் தனது அருட்கொடைகள் பற்றி பிறருக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றும் கூறியுள்ளான். இதிலிருந்தும் பலன் பெறாமல் இருப்பதும் இறைவனுக்கு நன்றிகேடு காட்டுவதுமாகும்.

அறிவிப்புகளில் இவ்வாறு வருகின்றது. சில நபித்தோழர்கள் நாங்கள் தினமும் நோன்பு வைப்போம். திருமணம் செய்ய மாட்டோம். பெண்களுக்கு அருகில் செல்ல மாட்டோம். முழு இரவும் தொழுது கொண்டே இருப்போம் என்று உடன்படிக்கை செய்து கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதுபற்றி தெரிய வந்த போது அவர்கள், பாருங்கள்! நான் நோன்பும் நோற்கின்றேன். நோன்பு திறக்கவும் செய்கின்றேன். தொழுகைகளை நிறைவேற்றுகின்றேன். தூங்கவும் செய்கின்றேன். மற்ற உலகப் பணிகளையும் வீட்டு வேலைகளையும் செய்கின்றேன். பெண்களுடன் திருமணமும் செய்து கொள்கின்றேன். எந்த நபர் என்னிடமிருந்து முகம் திருப்பிச் சென்று விடுகின்றனரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல என்று கூறினார்கள்.

**மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள்! நான் உங்களை விட அதிகமாக இறைவனுக்கு அஞ்சுகின்றேன். மேலும் எனது விருப்பங்களை இறைவனின் விருப்பத்தின் கீழ் வைத்து விடுகின்றேன்.

உலக விருப்பங்கள் மற்றும் அவற்றை நிறைவேற்றி நிம்மதி அடைவது என்பது மட்டும் குறிக்கோளாக இருக்கக் கூடாது என்பதே இதன் கருத்தாகும். இவற்றில் சிறந்த பொருள்களை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் நடுநிலையைப் பேணியவாறும் இறைவனின் விருப்பத்தை கண்முன் நிறுத்தியவாறும் இந்த உலக பொருள்களிலிருந்து பலன் அடைந்தால் இதுவே தூய்மையை மேற்கொள்வது என்பதாகும். இங்கு வந்து இந்த மேற்கத்திய நாடுகளில் உங்களுக்கு இருக்கும் சுதந்திரம் காரணமாக இங்குள்ள ஒவ்வொரு பொருளும் உங்களது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பேராசையின் காரணமாக உங்களை தன் பக்கம் ஈர்க்கின்றது என்றால், பிறகு நீங்கள் மாநாட்டிற்கு வருவது பலனற்றதாகும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நீங்கள் பைஅத் செய்திருப்பதும் பலனற்றதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களிடம் உளத்தூய்மையை உருவாக்குங்கள். இதை உருவாக்கினால்தான் இறையச்சத்தின் உண்மையான ஆன்மாவை நீங்கள் அடையாளம் கண்டு கொள்வீர்கள். தக்வா என்றால் என்ன? ஒவ்வொரு சமயத்திலும் இறைவன் என்னிடம் வெறுப்படையும் வகையில் எந்த செயலையும் நான் செய்து விடக்கூடாது என்ற அச்சம் உள்ளத்தில் இருப்பதாகும். இறைவன் என்னிடம் வெறுப்படைந்து விடக் கூடாதே என்ற அச்சம், அவன் என்னை தண்டித்து விடுவான் என்பதால் ஏற்படக் கூடாது. தனக்கு மிகவும் நெருக்கமானவர் அல்லது தனக்கு மிகவும் பிரியமான நண்பர் தன்னிடம் வெறுப்படைந்து விடக்கூடாதே என்ற அச்சம் ஒருவருக்கு ஏற்படுவது போன்று இறைவன் மீதுள்ள அச்சம் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு எல்லா நேசங்களையும் விட மிகைத்து நிற்கும் போது தான் இது நடக்க முடியும். இறைவனுடன் தனக்கு தொடர்பும் அவனைப் பற்றிய ஞானமும் இருந்தால் தான் இத்தகைய அன்பு உருவாக முடியும். இறைவன் மட்டுமே குறிக்கோளாக இருக்கும் போது தான் இது நடக்கும். இத்தகைய தரத்தைப் பெறுவதற்காக நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இத்தகைய இறையச்சத்தின் தரத்தை நம்மிடம் உருவாக்குவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை பல்வேறு கோணங்களில் நமக்கு போதனை செய்துள்ளார்கள்.

**அவர்கள் தமது சொற்பொழிவு ஒன்றில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்திற்கு நன்மையை விரும்புவதற்கு இறையச்சம் தொடர்பாக அவர்களுக்கு போதனை செய்வது மிகவும் அவசியமானது என்று தெரிகிறது. ஏனென்றால் இறையச்சத்தை தவிர வேறு எவற்றாலும் இறைவன் திருப்தி அடையமாட்டான் என்பது அறிவுள்ளவரின் பார்வையில் தெளிவாக இருக்கின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوا وَّالَّذِينَ هُم مُّحْسِنُونَ ۞

*நிச்சயமாக அல்லாஹ் இறையச்சத்தை மேற்கொண்டு நடப்பவர்களுடனும் நன்மை செய்பவர்களுடனும் இருக்கின்றான். (16:129)*

ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு இதுபற்றி மீண்டும் மீண்டும் போதனை செய்வதற்கான காரணம் என்னவென்றால், இந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரிடம் பைஅத் செய்து, இந்த பைஅத்தின் காரணமாக இறைவன் எங்களிடம் திருப்தி அடைந்துள்ள மக்களாக நாங்கள் இருக்கின்றோம் அல்லது அல்லாஹ்வை திருப்திப்படுத்தவே நாங்கள் பைஅத் செய்துள்ளோம் என்று நாம் வாதம் செய்து அதை அறிவிக்கும் போது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நமது வாதத்திற்கேற்ப நாம் செயல்பட வில்லையென்றால் நமது வாதம் வெறும் வாதமாக மட்டுமே இருக்கும். நமது பாதங்கள் தக்வாவை நோக்கி முன்னேறிச் செல்லவில்லை என்றால் இது வெறும் வாதம் மட்டுமாகத்தான் இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்டுள்ள இந்த வசனம் இறையச்சம் என்றால் என்ன? என்பதை விளக்குகின்றது. நன்மை செய்கின்ற மக்களிடமே இறையச்சம் இருக்கின்றது. முஹ்ஸின் என்பதன் பொருள், மற்றவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்பவர்கள் என்பதாகும். அத்தகைய நன்மை செய்யும் மக்கள் பிறரது உணர்வுகளைக் கருத்தில் கொள்பவர்களாக இருப்பார்கள். அறிவுள்ள மக்களாக அவர்கள் இருப்பார்கள். இந்த அறிவு அவர்களை இறையச்சத்தின் வழிகளில் செல்ல வைக்கக் கூடியதாக இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சொற்களில் இருக்கும் அழகை பாருங்கள்!**

முதலில் உளத்தூய்மையை மேற்கொள்வதன் பக்கம் கவனமூட்டியவாறு உங்களது விருப்பங்களை இறைவனின் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். பிறகு தக்வாவை மேற்கொள்பவர்கள் தொடர்பாக அல்லாஹ்வின் வசனங்களிலிருந்து எத்தகைய உதாரணத்தை எடுத்துக் கூறினார்கள் என்றால் தங்களது உணர்வுகளை மற்றவர்களின் உணர்வுகளுக்காக தியாகம் செய்தவாறு அவர்களுக்கு பயனளியுங்கள் என்று அவர்கள் போதனை செய்துள்ளார்கள். இதன் காரணமாக இறையச்சம் உடையவராக ஆவதுடன் இறைவனது திருப்தியைப் பெறக்கூடியவர்களாக நீங்கள் ஆகிவிடுவீர்கள்.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத் குறிப்பாக இறையச்சத்தைப் பேணுவது அவசியமானதாகும். குறிப்பாக அவர்கள் எத்தகைய நபருடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்களோ, எவரிடம் பைஅத் செய்துள்ளார்களோ அவர் தன்னை இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் என்று வாதம் புரிபவராக இருப்பதால் இது மிகவும் அவசியமானதாகும். அதன் மூலம் அந்த மக்கள் ஏதாவதொரு வகையில் காழ்ப்புணர்ச்சிகள், வெறுப்புகள் அல்லது இணை வைக்கின்ற செயல்கள் ஆகியவற்றில் மூழ்கி இருந்தாலும், எந்த அளவு உலகையே சார்ந்திருப்பவர்களாக இருந்தாலும் இறையச்சத்தின் மூலமாக அவர் இரட்சிப்பைப் பெற வேண்டும்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததாக ஒருவர் அறிவிப்பது சாதாரண அறிவிப்பு அல்ல. இதற்கான காரணம் நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளதாக வாதம் செய்துள்ளேன். அல்லாஹ்வின் தரப்பிலிருந்தும் இந்தப் பணியைச் செய்வதற்காக நான் அனுப்பப்பட்டுள்ளேன் என்பதே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதமாகும். என் மூலமாக உலகின் சீர்திருத்தம் ஏற்படும். என் மூலமாக அடியார் இறைவனை அடையாளம் கண்டு கொள்ள முடியும். மேலும் இறைவனுடன் அவருக்கு

தொடர்பு ஏற்பட்டு விடும். என் மூலமாகவும் என்னை ஏற்றுக் கொண்டவர்கள் மூலமாகவும் எந்த உயர்வான நல்லொழுக்கம் தொடர்பாக அவற்றை பேணும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறைவன் இறக்கியுள்ள இறுதி சரீஅத்தாகிய திருக்குர்ஆனில் போதித்துள்ளானோ அந்த உயர்வான நல்லொழுக்கங்கள் நம்மிடமிருந்து வெளிப்படும். அது வளர்ச்சி அடையும் என்பதே எனது வாதமாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எனவே இறைவனின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதற்கு எல்லா விதமான காழ்ப்புணர்ச்சிகள், வெறுப்புகள் ஆகியவற்றை நமது உள்ளங்களிலிருந்து நாம் வெளியேற்ற வேண்டும். நமது உள்ளங்களைக் கண்ணாடி போன்று சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அல்லாஹ்வுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதற்கு எல்லா விதமான இணைவைத்தலிலிருந்தும் நம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். உலகத்தின் மீதுள்ள அச்சம் அல்லது உலகவாதிகள் மீதுள்ள அச்சம் அல்லது உலக விவகாரங்களின் பக்கமே கவனம் இருப்பது ஆகியவற்றால் மனிதன் இறைவனை மறந்து விடுகின்றான். அவனது இறைவணக்கத்தின் தரத்தில் குறைவு ஏற்பட்டு விடுகின்றது. இந்த அனைத்திலிருந்தும் விலகி இருந்தால் தான் பைஅத்திற்குரிய உரிமையைச் செலுத்தியவர்கள் என்று நீங்கள் அழைக்கப்படுவீர்கள். இவை யாவும் தக்வா இல்லாமல் கிடைப்பது சாத்தியமற்றதாகும். பைஅத்திற்குரிய உரிமையைச் செலுத்த வேண்டும் என்றால் இந்த தூய மாற்றங்களை தமக்குள் உருவாக்கி உங்களை சீர்திருத்த வேண்டும். இந்த தூய மாற்றங்களை உங்களிடம் உருவாக்குவதன் காரணமாக நீங்கள் பல ஆபத்துகளில் இருந்தும் இரட்சிப்பை பெறுவீர்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் கடுமையான சொற்களில் எச்சரிக்கவும் செய்துள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் மிகவும் கருணைமிக்கவனாகவும் மிகவும் பரிவு காட்டக்கூடியவனாகவும் இருக்கின்றான். அவ்வாறே அவன் கோபப்படுகின்றவனும், பழிவாங்குபவனாகவும் இருக்கின்றான். ஒரு ஜமாஅத்தை அவன் பார்க்கின்றான். அதில் உள்ளவர்களது வாதமும் வாய் பேச்சுக்களும் அதிகமாக இருக்கின்றது. ஆனால் அவர்களது செயல் நிலைமை அதற்கேற்ப இல்லையென்றால் அவனது கோபம் அதிகரித்து விடுகின்றது.

ஒருபோதும் இறைவனது கோபத்தைக் காணக் கூடியவர்களாக நாம் ஆகாமல் இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக! மாறாக நாம் எப்போதும் இறையச்சத்தை நம் கண் முன்னால் வைத்தவாறு நமது ஆற்றல்களுக்கு ஏற்ப முயற்சி செய்பவர்களாகவும் அல்லாஹ்விடம் எப்போதும் அவனது அருளையும் கருணையையும் வேண்டுபவர்களாகவும், அவனது அருளையும் கருணையையும் பெற்றுக் கொள்பவர்களாகவும் நாம் இருப்போமாக! இத்தகைய தரத்தைப் பெறுவதற்கு நமது நிலைமை எப்படி இருக்க வேண்டும்? என்ன முயற்சிகளை நாம் செய்ய வேண்டும்?

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் எந்த அளவு நன்மைகள் செய்கின்றானோ அவை இரு வகைப்படும். ஒன்று, ஃபர்ள் – கடமையாக்கப்பட்டவை. மற்றொன்று நவாஃபில் – உபரியான நற்செயல்கள். ஃபர்ள் என்பது மனிதன் மீது கடமையாக்கப்பட்டவையாகும். உதாரணமாக, **கடனைத் திருப்பிக் கொடுப்பது அல்லது நன்மைக்குப் பகரமாக நன்மை செய்வது** போன்றவை உள்ளன.

சிலர் கடன்வாங்கி விட்டு அதை திருப்பித் தராமல் சாக்குப்போக்கு கூறுகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றாகும் என்று கூறுகின்றார்கள். அதாவது கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் அல்லது எவராவது உங்களுக்கு நன்மை செய்தால் அதற்குப் பகரமாக நீங்களும் நன்மை செய்ய வேண்டும். இந்த ஃபர்ளான கடமைகளைத் தவிர ஒவ்வொரு நன்மையுடனும் நஃபிலான – உபரியான நற்செயல்களும் உள்ளன. அதாவது ஒரு நன்மைக்குரிய உரிமையை விட அதிகப்படியான நன்மையாக அது இருக்கும். அதாவது நன்மை செய்ததற்கு ஈடாக நன்மை புரிவதுடன் மேலும் நன்மை செய்வது இருக்கின்றது. இது நஃபிலான அதாவது உபரியான நன்மைகளாகும். உதாரணமாக, ஸக்காத் கொடுப்பதுடன்

மட்டுமல்லாமல் அவர்கள் மேலும் ஸதக்காக்களைச் செலுத்துகின்றனர். அல்லாஹ் அப்படிப்பட்டவரது நண்பனாக ஆகி விடுகின்றான்.

அவனது நட்பு எந்த அளவு இருக்கும் என்றால், நான் அவனது கையாகவும் காலாகவும் ஆகி விடுகின்றேன். எதுவரை என்றால், அவன் பேசுகின்ற நாவாகவும் நான் ஆகி விடுகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

இத்தகையவனே நமது இறைவனாவான். ஒவ்வொரு செயலுக்குரிய கூலியை மட்டும் அவன் வழங்குவதில்லை. மாறாக, அவன் அப்படிப்பட்ட அடியாருடைய நண்பனாக ஆகிவிடுகின்றான். அதாவது இறைவனுடைய நட்பு மற்றும் அவனது பாதுகாப்பின் எத்தகைய வழிகள் திறக்கின்றன என்றால் மனிதனது சிந்தனை கூட அதுவரை எட்ட முடியாது. ஆனால் இந்த தகுதி எப்போது கிடைக்கும்?

இதுபற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நன்மைக்குப் பதிலாக நன்மையை நீங்கள் செய்யும் நிலைமையில் தான் இந்த தகுதி கிடைக்கும். உங்களுக்கு எவராவது நன்மை செய்தால் அதற்குப் பதிலாக அதற்கு ஈடான நன்மையை எவ்வாறு செய்ய முடியும்? என்ற தேட்டத்தில் நீங்கள் இருக்க வேண்டும். இது மட்டும் போதாது.

மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நன்மைக்கு சமமாக ஒரு நன்மையைச் செய்வது அந்த நன்மையை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் ஒருவர் செய்த நன்மையை விட அதிகமான நன்மைகளை அதற்கு ஈடுசெய்யும் வகையில் செய்வது ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் பணியாகும்.

இப்போது பாருங்கள்! எந்த சமுதாயத்தில் இத்தகைய நிலைமை ஏற்படுமோ அதாவது அந்த சமுதாயத்தில் ஒருவர் செய்த நன்மைக்குப் பதிலாக மற்றவர் அவரை விட அதிகமான நன்மைகளைச் செய்பவராக இருந்தால், மேலும் ஒவ்வொருவரும் இவற்றின் பக்கம் கவனம் செலுத்துபவராக இருந்தால், மேலும் இந்த செயலைச் செய்பவராக அவர் இருந்தால் அதாவது ஒருவர் மற்றவருக்கு நன்மை செய்கின்றார். முதலாமவர் தனக்கு செய்யப்பட்ட நன்மையை விட அதிகமான நன்மையை மற்றவருக்கு செய்ய வேண்டும் என்று இருந்தால் அப்படிப்பட்ட சமுதாயம் ஒருபோதும் சுயநலவாதிகளின் சமுதாயமாக இருக்க முடியாது. மாறாக அது அமைதி, அன்பு மற்றும் நேசம் ஆகியவற்றின் சமுதாயமாக ஆகிவிடும். இவை அனைத்துமே இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படும் போது பிறகு உள்ளங்களின் நிலையை அறிந்த இறைவன் எல்லாரையும் விட அதிகமாக கூலியை வழங்குபவனாக இருக்கின்றான். அவனது அருட்கொடைகளுக்கு எந்த எண்ணிக்கையும் கணக்கும் இருப்பதில்லை. பிறகு அவன் எப்படி வழங்குகின்றான் என்றால் அதுபற்றி மனிதனால் சிந்தித்துப் பார்க்க முடியாது.

இத்தகைய ஆன்மா நம்மிடம் உருவாக வேண்டியது அவசியமானதாகும். நாம் நன்மைகளைச் செய்ய வேண்டும். எந்த கூலியையும் எதிர்பார்க்காமல் நாம் நன்மை செய்ய வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதை செய்ய வேண்டும். நமது இறைவணக்கங்களிலும் ஃபர்ளான இறைவணக்கங்களுடன் நஃபிலான இறைவணக்கங்களும் இருக்க வேண்டும். ஏனென்றால், அதன் மூலம் நாம் இறைவனின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக ஆக வேண்டும். நமது மற்ற செயல்களுடனும் நஃபிலான காரியங்களை நாம் செய்ய வேண்டும். எந்த உலக நோக்கத்திற்காகவும் இவற்றை செய்யக்கூடாது. நன்மைக்குப் பதிலாக நன்மை செய்வது ஒரு மனிதரிடமிருந்து பலன்களைப் பெற வேண்டும் என்பதற்காக இருக்கக் கூடாது. மாறாக இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அதை செய்ய வேண்டும். இதுவே உண்மையான இறையச்சமாகும். இதுவே இறைவன் மதிக்கின்ற சத்தாக இருக்கின்றது.

அவ்வாறு இல்லையென்றால் இறைவன் கூறுகின்றான்: உங்களது வெளிப்படையான இறைவணக்கங்கள் வெளிப்படையான தியாகங்கள் ஆகியவை எனக்கு தேவையில்லை. நாம் தொழுகின்றோம் என்றால் தொழ வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டிருக்கின்றான். அது கடமைகளில் ஒன்றாக இருக்கின்றது. இறைவணக்கங்களின் மிஃராஜ் – ஏணிப்படியாக தொழுகை இருக்கின்றது.

**பிறகு அல்லாஹ் கூறுகின்றான்:**

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ۝

*நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)*

பிறகு தொழுகைகளை நிலைநாட்டுவதற்கும், ஆண்கள் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதற்கும், முறையாக தொழுவதற்கும், அதற்குரிய நேரத்தில் தொழுவதற்கும் திருக்குர்ஆனில் பல இடங்களில் கட்டளையிடப்பட்டுள்ளது. ஆனால் இதே தொழுகைகள் சிலருக்கு அழிவாக ஆகிவிடுகின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே நிச்சயமாக இது நாம் சிந்திக்க வேண்டிய இடமாகும். அதாவது ஒரு நன்மையானது ஒரு மனிதனின் அழிவிற்குக் காரணமாக ஏன் ஆக வேண்டும்? என்று நாம் சிந்திக்க வேண்டும். இதற்குரிய சாதாரணமான விடை என்னவென்றால், அல்லாஹ் ஒவ்வொரு நன்மையைச் செய்யுமாறு கூறியுள்ள கட்டளையில் தக்வாவை அடித்தளமாக வைத்துள்ளான். அதாவது தோல்களுக்கும் தோடுகளுக்கும் உள்ளே இருக்கின்ற சத்தையே விரும்புகின்றார்கள். மேல் புறத்திலுள்ள தோல்களை மட்டும் அவன் விரும்புவதில்லை. நமது தொழுகைகள் மூலமாக நம்மிடம் மற்றவர்களுக்காக கருணையின் உணர்வுகள் உருவாகவில்லை என்றால் நாம் வெளிப்படையான ஒரு செயலை செய்து விட்டோம். ஆனால் அதில் இருக்க வேண்டிய ஆன்மா நமது தொழுகையில் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் தோடுகள் உள்ள பழங்களிலும் மேல்புறத்தில் பார்க்கும் போது அது மிகவும் நல்லதாக நமக்குத் தெரியும். ஆனால் அதை திறந்து பார்த்தால் உள்ளே இருக்கின்ற சத்தானது முழுமையாக உருவாகாமலேயே இருக்கும் அல்லது கிருமிகள் அதை தின்றிருக்கும். உதாரணமாக, பாதாம் கொட்டைகள் இருக்கின்றன. சில பாதாம் கொட்டைகளை மனிதன் ஆர்வத்துடன் திறந்து பார்க்கின்றான். ஆனால் உள்ளுக்குள் அவை மிகவும் கசப்பாக இருக்கும்.

எனவே நாம் நமது செயல்கள் மூலமாக இறைவனது கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு இந்த சத்தை அல்லது இந்தப் பழத்தைப் பாதுகாக்க வேண்டும். அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நமது தொழுகைகளும், நமது இறைவணக்கங்களும் நம்மை இறைவனுடன் தொடர்புள்ளவர்களாக ஆக்குவதுடன் மட்டுமல்லாமல் அது நம்மிடம் மனித இனத்துடன் அனுதாபம் காட்டுகின்ற உணர்வுகளையும் நம்மிடம் உருவாக்கும்போது தான் இது நடக்க முடியும்.

அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனி ஜமாஅத் ஒவ்வொரு வருடமும் நான்கு அல்லது ஐந்து பள்ளிவாசல்களைக் கட்டுகின்றது. அவற்றை திறந்து வைப்பதற்கான சந்தர்ப்பமும் எனக்கு கிடைக்கின்றது. ஏறக்குறைய ஒவ்வொரு இடத்திலும் நான் இதையே கூறுகின்றேன். இந்த பள்ளிவாசலைக் கட்டிய பிறகு இந்த பள்ளிவாசல் இருக்கின்ற பகுதியில் வசிக்கின்ற அஹ்மதிகளின் பொறுப்புகள் அதிகமாகி விடுகின்றது. பள்ளிவாசல்களைக் கட்டி விட்டு அதில் தொழுவதற்காக வருவதில் மட்டும் எவ்வித சிறப்பும் இல்லை. நீங்கள் ஐவேளைத் தொழுகைக்காகவும் பள்ளிவாசலுக்கு வருபவராக இருந்தாலும் சரியே! அசல் விசயம் என்னவென்றால் இந்த பள்ளிவாசல் மூலமாக பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவருடன் உள்ள தொடர்பு வலுவானதாக ஆகிவிட வேண்டும். இந்த பகுதியிலுள்ள மக்கள் மீது இஸ்லாத்தின் அழகிய வடிவம் ஒவ்வொரு அஹ்மதியின் செயல் மூலமாகவும் வெளிப்பட வேண்டும். நம்மவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஒவ்வொருவர் மீதும் அல்லாஹ்வை வணங்குபவர்கள் தங்களது சுற்றுச்சூழலில் உருவாக்குகின்ற அந்த ஆன்மாவின் தாக்கம் இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த போதனை, இந்த விருப்பம் அஹ்மதிகள் மூலம் நிறைவேற வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மென்மையான உள்ளம் உடையவராக இருப்பது, பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவது சகோதரத்துவம் ஆகியவற்றில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஆகி விட வேண்டும். இந்த அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் முன்மாதிரியை பரஸ்பரம் நம்மவர்களில் ஒருவர் மற்றவருக்காக வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். மற்றவர்களிடமும் இதை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். பரஸ்பரம் நம்மில் ஒருவர் மற்றவரிடம்

வெளிப்படுத்திக் காட்டும் முன்மாதிரியானது எங்கு அல்லாஹ்வின் அன்பை ஈர்த்தவாறு தக்வாவின் தரத்தை உயர்த்தக் கூடியதாக இருக்குமோ அங்கு மற்றவர்களுக்காகவும் அவை இஸ்லாத்தின் அழகிய போதனைகளின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டக்கூடியதாகவும் இருக்கும். இவ்வாறு தப்லீக் செய்வதற்காக மேலும் பல களங்கள் திறக்கப்பட்டு விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்காக துஆ செய்யுமாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் எனது இந்த ஜமாஅத்தில் உள்ளவர்களது உள்ளங்களை தூய்மைப்படுத்துவானாக! தனது கருணையின் கையை நீட்டியவாறு அவர்களது உள்ளங்களை தன் பக்கம் திருப்புவானாக! எல்லா விதமான தீங்குகளையும் காழ்ப்புணர்ச்சியையும் அவர்களது உள்ளங்களிலிருந்து வெளியேற்றி விடுவானாக! பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வைக்கின்ற உண்மையான நேசத்தை அவர்களுக்கு வழங்குவானாக!

அல்லாஹ் நம் அனைவரையும் இந்த துஆவின் வாரிசுளாக ஆக்குவானாக! பிறகு அவர்கள் நான் ஆரம்பத்தில் படித்த அந்த மேற்கோளில் தாழ்மைக்குணம், பணிவு ஆகியவற்றின் பக்கமும் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள். இந்த செயலும் கூட பரஸ்பரம் ஒருவர் மற்றவர் மீது வைத்துள்ள அன்பை அதிகமாக்குகின்றது. ஒருவர் மற்றவருக்கு செலுத்த வேண்டிய உரிமைகளின் பக்கம் கவனமூட்டுகின்றது. அந்நியர்களின் கவனத்தையும் ஈர்க்கின்றது. அல்லாஹ்வும் தனது அடியார்களின் ஓர் அடையாளமாக,

يَمْشُونَ عَلَى الْأَرْضِ هَوْنًا

*அவர்கள் பூமியில் பணிவுடன் நடந்து செல்பவர்களாக இருப்பர் (25:64)* என்று கூறுகின்றான். இந்த பணிவு மனிதனிடம் அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்கின்ற, சமுதாயத்தின் அழகை மேலும் அதிகரிக்கச் செய்கின்ற அந்த ஆன்மாவை உருவாக்குகின்றது. ஒருவருக்கு மற்றவருடன் உள்ள தொடர்புகளில் உள்ள அழகையும் அது மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. ஒருவர் மற்றவர் மீது வைத்துள்ள பகைமையை அது அகற்றுகின்றது. அன்பை வளர்க்கின்றது. பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நேர்மை, உண்மை ஆகியவற்றை கடைபிடிப்பதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள். தக்வாவின் வழிகளில் செல்பவர் எல்லா விதமான நன்மைகளைச் செய்யக் கூடியவராக இருந்தால் தக்வா என்பதன் விளக்கமே இதுதான். எவர் இறையச்சத்தின் உண்மையை அறிந்து கொண்டாரோ அவர் எல்லாவற்றையும் பெற்று விட்டார். ஆனால் அவற்றில் சில அம்சங்கள் தொடர்பாக வலியுறுத்திக் கூறுவதும் அவசியமானதாகும். சில செயல்கள் தக்வாவின் தரத்தை உயர்த்துகின்றன. எனவே நேர்மை மற்றும் சரியானதும் உண்மையானதுமான கூற்றுகளைக் கூறும்படி அல்லாஹ் குறிப்பாக வலியுறுத்திக் கூறியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ﴿٧١﴾

*நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். தூய்மையான நேர்மையான கூற்றுக்களைக் கூறுங்கள். (33:71)*

இந்த வசனத்தை விளக்கியவாறு இரண்டு அல்லது மூன்று வாரத்திற்கு முன்னால் எனது குத்பாவில் இதுபற்றி கூறியிருந்தேன். குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவற்றை தங்களது ஆன்மீக முன்னேற்றத்திற்காக மாநாட்டில் வருபவர்களுக்காக எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது உங்களது தக்வாவின் தரத்தை உயர்த்துங்கள். உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். இவை இருந்தால் தான் நீங்கள் மாநாட்டில் வருவதற்கான உரிமையை செலுத்தியவர்களாக ஆவீர்கள். இதற்காக நேர்மை, உண்மை, சரியான முறையில் பேசுவது ஆகிய பண்புகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும். இவை அடிப்படையானவையாகும். எனவே உங்களது உண்மையின் தரத்தை உயர்த்துங்கள். அதன் மூலமாக எந்த நோக்கத்திற்காக நீங்கள் ஒன்றுகூடி இருக்கின்றீர்களோ அந்த நோக்கத்தை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள். ஒவ்வொரு அஹ்மதியின் நேர்மையின் தரம் உயரும்போது அவர் பேசும் பேச்சிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நாம் கூறுகின்றவைகளில் தாக்கம் இருந்தால், பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தையும் அன்னாரது பிரச்சாரத்தையும் முன்னேற்றமடையும்படி செய்பவர்களில் ஒருவராக நாம் ஆக முடியும். எந்த கொள்கையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டு வந்தார்களோ அவை இரண்டு முக்கிய பணிகளை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. ஒன்று அடியானுக்கு இறைவனை அடையாளம் காணும்படி செய்து அவனை இறைவனை சந்திக்க வைப்பதாகும். இரண்டாவது, மனித இனத்திற்கு செலுத்த வேண்டிய உரிமைகளைச் செலுத்துவதாகும். இந்த இரண்டு பணிகளும் எப்படிப்பட்டது என்றால் இவை நம்மிடமிருந்து இறையச்சத்தையும் தியாகத்தையும் வேண்டுகின்றது. அவை நம்மிடம் நமது செயல் அளவிலான நிலைமைகளில் தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்தும்படி வேண்டுகின்றது. நமக்கு அல்லாஹ்வுடன் வலுவான தொடர்பு ஏற்படாத வரை உலகை நாம் அல்லாஹ்வுடன் இணைக்க முடியாது.

இரண்டாவதாக, மனித இனத்திற்கு செலுத்த வேண்டிய உரிமைகள் உள்ளன. தாழ்மைக்குணம், பணிவு, உண்மை, அன்பு, சகோதரத்துவம், தியாகம் செய்யும் உணர்வு ஆகியவற்றை நாம் கடைபிடிக்காத வரை மனித இனத்திற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை நம்மால் செலுத்த முடியாது.

எனவே இந்த மூன்று நாட்களில் நாம் நமது இந்த தொடர்பு மற்றும் நமது உணர்வு ஆகியவை தொடர்பாக ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இவற்றை நாம் அதிகமாக்க வேண்டும். இன்சா அல்லாஹ். அதன் மூலம் மாநாட்டில் வருகை தந்ததற்கான நோக்கத்தைப் பெறக்கூடியவர்களாக நாம் ஆக வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்தை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் நாம் ஆக வேண்டும். எனவே இந்த மூன்று நாட்களில் உங்களது தக்வாவின் தரத்தை உயர்த்துவதற்கும் உங்களது செயலின் நிலைமைகளை சீராக வைத்திருப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும், மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் துஆவும் செய்யுங்கள். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

உண்மையிலேயே இந்த மாநாட்டின் நோக்கங்களை முழுமையாகப் பெறுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at JALSA GROUND, KARLSRUHE, GERMANY.

on **28.06.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456